# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர்சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 17.11.2020**

**முன்னிலை**

**திரு ரா.ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 3312/SCIC/2019**

திருமதி/செல்வி அரு.வெண்ணிலா .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்*

பொதுத் தகவல் அலுவலர் /
உதவி ஆணையர் / செயல் அலுவலர்,
அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில்,
இந்து சமய அறநிலையத் துறை, பேரூர். .. பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் திருமதி/செல்வி அரு.வெண்ணிலா தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் 14.09.2018 தேதியிட்டு அனுப்பிய மனுவில், பேரூர் கோயில் அலுவலகத்தின் கடந்த 2016 சனவரி முதல் தகவளிக்கும் நாள்வரை காசோலைகள் வழங்கிய விவரம், செலவுச்சீட்டு பட்டியல், தணிக்கை அறிக்கை, பராமரிப்பு போன்ற விவரங்களை 17 இனங்களில் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 15.10.2018 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன்பின்னர் மனுதாரர் 19(1)-ன் கீழ் 20.11.2018 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன்பின்னர் 06.04.2019 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை அனுப்பி, தான் கோரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து அவற்றைத் தனக்குப் பெற்றுத் தருமாறு கேட்டுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால் ஏற்கனவே 15.07.2020-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை மனுதாரருக்கு வழங்குவதற்கு கடைசி வாய்ப்பாக 30.07.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான

தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, அவர் ஆணையத்திற்கு 05.08.2020-க்குள் கடிதம் மூலம் தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

3. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால் ஏற்கனவே விசாரணைக்காக பட்டியலிடுவதற்கு முன், மனுதாரரை தொடர்பு கொண்டபோது, ஆணையத்தின் ஆணைக்குப்பின் வழங்கப்பட்ட பதிலும் திருப்தியில்லை என்று தெரிவித்தார்.

4. அதன்பின்னர், வழக்கு 18.08.2020 அன்று விசாரிக்கப்பட்டது. அன்றைய விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் கோரிக்கைகளுக்கு பல்வேறு பதிவேடுகளிலிருந்து தொகுக்க வேண்டியுள்ளது என்றும், அதற்குரிய ஆள்பலம் இல்லை என்றும் தெரிவித்தார். தயார் நிலையில் உள்ள தகவல்களை வழங்க வேண்டும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டு, வழக்கு 03.09.2020-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

5. அதன்பின்னர், வழக்கு 03.09.2020 அன்று விசாரிக்கப்பட்டது. அதன்பின்னர், வழக்கு 21.09.2020 அன்று விசாரிக்கப்பட்டது. அன்றைய விசாரணையின்போது, பொதுத் தகவல் அலுவலர், தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்றும், ஆவண நகல்களை முழுமையாக எடுப்பதற்கு மேலும் 15 நாட்கள் காலஅவகாசம் கோரியதன்பேரில், வழக்கு 13.10.2020-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

6. அதன்பின்னர், வழக்கு 13.10.2020 அன்று விசாரிக்கப்பட்டது. அன்றைய விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர் சில தகவல்களை வழங்கியுள்ளதாகவும், சில தகவல்களை வழங்கவில்லை என்றும் மனுதாரர் தெரிவித்தார். விடுபட்ட தகவல்களையும் வழங்க வேண்டும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டு, வழக்கு 19.10.2020-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

7. அதன்பின்னர், வழக்கு 19.10.2020 அன்று விசாரிக்கப்பட்டது. அன்றைய விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர் அனைத்துத் தகவல்களையும் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து, அவற்றின் நகல்களை ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். மனுதாரர் அவை கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவித்ததால், வழக்கு 23.10.2020-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

8. அதன்பின்னர், வழக்கு 23.10.2020 அன்று விசாரிக்கப்பட்டது. அன்றைய விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர் 16 இனங்களுக்கான தகவல்கள் வழங்கியுள்ளதாகவும், இனம் 17-ல் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2015 முதல் 2018 வரை பெறப்பட்ட மனுக்களுக்கு அளிக்கப்பட்ட பதில்கள் வழங்கப் படவில்லை என்றும் மனுதாரர் தெரிவித்தார். மனுசெய்த மனுதாரர்களின் பெயர்களை மறைத்துவிட்டு தகவல்களை வழங்கலாம் என்று ஆணையிடப்பட்டு, வழக்கு 10.11.2020-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

9. வழக்கின் விசாரணை 10.11.2020 அன்று நடைபெற்றது. பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் கோரிக்கைகளுக்கு தகவல் வழங்க மேலும் 5 நாட்கள் காலஅவகாசம் வழங்குமாறு கோரினார். அதன்பின் பொதுத் தகவல் அலுவலர் ந.க.எண்.த.உ.19/2018/அ1, நாள் 16.11.2020 என்ற கடிதத்தின் மூலம் அனைத்துத்

தகவல்களையும் வழங்கிவிட்டதாகத் தெரிவித்து, அவ்வாறு அனுப்பப்பட்ட ஆவணங்களின் நகல்களை ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். மனுதாரரும் தனது கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிவிட்டதாகவும், பெறப்பட்ட தகவல்களால் தான் மனநிறைவு அடைவதாகவும் ஆணையத்திடம் தெரிவித்தார். **ஆகவே இவ்வழக்கின் விசாரணையை முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

**ஓம்/- (ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண்.** SA 3312/**SCIC/2019**</u>

**பெறுநர்**
<u>**பொது அதிகார அமைப்பு**</u>
பொதுத் தகவல் அலுவலர் /
உதவி ஆணையர் / செயல் அலுவலர்,
அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில்,
இந்து சமய அறநிலையத் துறை,
பேரூர்.

<u>**மனுதாரர்**</u>

திருமதி/செல்வி அரு.வெண்ணிலா,
133, சுப்பிரமணியர் கோயில் தெரு,
இராமநாதபுரம்,
கோவை-641 045.
*PR/PS 19/11/*2020